MCOP.No.263/2022
Date : 07.11.2025
Pw – 1
பெயர்: செந்தில் கணபதி
த/பெ: வேலுசாமி

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தில் ஈடுபட்ட எனக்கு சொந்தமான TN18 J7672 என்ற பதிவெண் கொண்ட டாடா வென்சூர் என்ற வாகனத்தை சென்னை வடபழனியில் உள்ள கார் விற்பனை நிலையத்தில் இருந்து நான் 2012 ம் வருடம் விலைக்கு வாங்கினேன். அந்த காரை என் பெயரில் தான் பதிவு செய்திருந்தேன். விபத்து நடந்த தேதி தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. கடந்த 03.09.2021 தேதியில் நடந்த சாலை விபத்தில் TN 18 J 7672 என்ற பதிவெண் கொண்ட டாடா வென்சூர் வாகனம் மோதி 1ம் மனுதாரரின் கணவர் குருசாமி என்பவர் இறந்துவிட்டார் என்ற விபரம் எனக்கு இந்த வழக்கின் மனுநகல் கிடைக்கப்பட்டபிறகு தான் தெரியும். 03.09.2021 தேதியில் விபத்தை ஏற்படுத்திய மேற்படி வாகனம் என்னுடைய பெயரில் தான் பதிவு செய்யப்பட்டிருந்து என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்னுடைய மேற்படிவாகனத்தின் பதிவு சான்றிதழ் தான். அந்த சான்றிதழ் என்னுடைய பெயரில் தான் இருந்து வந்தது. விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தின் பதிவு சான்றிதழ் என் பெயரில் தான் இருந்து வந்தது என்பதால் மனுதாரர்களுக்கு நான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 சான்றாவணங்களில் முறையான முத்திரை வில்லை ஒட்டப்படவில்லை என்பதால் அந்த ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால்சரியல்ல. என்னுடைய வாகனத்தை விற்பனை செய்தது சம்மந்தமாக பெயர் மாற்றம் செய்யவேண்டி வட்டார போக்குவரத்து அலுவலருக்கு நான் கடிதம் அனுப்பியிருந்தேன். நான் அதுபோல் கடிதம் அனுப்பவில்லை என்று சொன்னாலும், கடிதம் அனுப்பியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. விபத்து

தேதியில் என்னுடைய வாகன ஓட்டுநர் தான் வாகனத்தை இயக்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் இழப்பீடு கொடுப்பதில் இருந்து தவிர்ப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– செந்தில் கணபதி

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.